செய்தி குறிப்பு எண்: 008 நாள்: 27.01.2015

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. ஓ. பன்னீர்செல்வம்** அவர்களின்

அறிக்கை – 27.1.2015

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வட்டம், **கெலவரப்பள்ளி நீர்த்தேக்கத்திலிருந்து,** இரண்டாம் போக புன்செய் பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிடக் கோரி வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, கிருஷ்ணகிரி மாவட்டம், கெலவரப்பள்ளி நீர்த்தேக்கத்திலிருந்து, இரண்டாம் போக புன்செய் பாசனத்திற்கு **28.1.2015 முதல்** தண்ணீர் திறந்துவிட ஆணையிடப்படுகிறது.

இதனால், கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வட்டத்தில் உள்ள **8,000 ஏக்கர்** நிலங்கள் பயன்பெறும்.

**ஓ. பன்னீர்செல்வம்**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு: இயக்குநர் செய்தி மக்கள் தொடர்பு துறை
சென்னை: 9